# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur

C.C.No.60/2018

Deposition of witness for PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | மணிகண்டன் | சாதி | .. | |
| த.பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 28.6.2022

மு.வி – நான் தற்போது திருவில்லிபுத்தூர் தனியா நகரில குடியிருந்து சன் டிவி ரிப்போர்ட்டராக பணிபுரிந்து வருகிறேன், அசா.1 ஐ தெரியும்., வழகு்கில இறந்து போன சிவகுமார் எனது நண்பராவார். கடந்த 9.7.2016 ம் தேதி முறம்புஅருகே உள்ள பெரியாண்டவர்கோவிலுக்கு சாமிகும்பிடுவதற்காக நானும் அ.சா.1 ம் ஒரு வாகனத்திலும் சிவகுமார் அவரது வாகனமான டிஎன் 84 6122 என்ற எ ண் கொண்ட இரு சக்கர வாகனத்திலும் சென்றோம் சாமி கும்பிட்டு விட்டு திரும்ப வந்துகொண்டிருந்தபோது மாலை 3 மணியளவில் மடவார்விளாகம் கிருஷ்ணா நகர் அருகே எனக்கு முன்னால் சிவகுமார சென்றார் அவருக்க பின்னால் நாங்கள் சென்றோம். அப்போது திருவில்லிபுத்தூரிலிருந்து ராஜபாளையம் நோக்கி வந்த டிஎன் 46 எம் 3180 என்ற எண் கொண்ட லாரி அதிவேகமாக வந்து ராங் சைடில் ஏறி இடதுபுறமாக சென்றுகொண்டிருந்த சிவகுமார் வாகனத்தின் மீது மோதியது. உடனே அசா.1 யிடம் சிவா சென்ற வாகனத்தில லாரி மோதிவிட்டது என்று சொன்னவுடன் உடனே வாகனத்தை நிறுத்தி விடடு போய் பார்த்தபோது சிவகுமாரின் இடது பக்க உடம்பு சிதைந்து

காணப்பட்டது, உடனே தனியார ஆம்புலன்சிற்கு தகவல சொல்லி ஆம்புலன்ஸ் வந்தவுடன் திருவில்லிபுத்தூர் அரசு மருந்ததுவமனைக்கு கொண்டு செனறோம்,. மருத்துவர் சிவகுமாரின் உடலைபரிசோதித்து பார்த்து விட்டு ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினார். ஆஜர் எதிரிதான ்சம்பவ சமயத்தில் லாரியை வேகமாக ஓட்டி வந்து சிவகுமாரன் இறப்பிற்க காரணமாக இருந்தார். இது சம்மந்தமாக அசா,.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி – நானும் அசா.1 ம் குடும்ப நண்பர்கள். நானும் அசா.1ம் சென்ற வண்டியின் எண் மற்றும்பெயர் ஞாபமில்லை. நானும் அசா.1ம் சென்ற வாகனத்தை நான் ஓட்டி வந்தேனா என்றால் இல்லை அசா.1 ஓட்டி வந்தார். சம்பவம் நடந்த போது எனது வீட்டிற்கும் அசா.1 வீட்டிற்கும் இடையே சுமார் 3/4 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்தின்போது நான் ரிப்போட்டர் என்பதால் எனக்கு தகவல் கிடைத்தபின்பு நான்தான் அசா.1 ஐ சம்பவயிடத்திற்கு சம்பவம் நடந்த பின்பு அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல. நானும் அசா.1ம் சம்பவத்தின்போது இறந்து போன நபரின் வண்டியின் பின்புறம் செல்லவில்லை என்றால் சரியல்ல. நானும் அ.சா.1ம் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் சம்பவத்தை பார்த்தோம். இறந்து போன சிவகுமார் அ.சா.1ன் மைத்துனர் என்பதாலும் அ.சா.1 எனது குடும்ப நண்பர் என்பதாலும் நான் தற்போது சம்பவத்தை பற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அ.,சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது சென்றேன். அப்போது ஆஜர் எதிரி காவல் நிலையத்தில் இருந்தாரா என்றால் ஞாபகமில்லை. உண்மையில சம்பவயிடத்தின்போது நான் இருந்திருந்தால் நான் சென்ற வாகனத்தின்

பெயர் மற்றும் எண் எனக்கு தெரிந்திருக்கும்என்றால் சரியல்ல. அசா.,1 கேட்டவாறு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.